www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSS

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024

# தமிழ்

8 - ஆம் வகுப்பு

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

I பகுதி – I சரியான விடையைத் தேர்வு செய்க. 10×1=10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. பள்ளிக்குச் சென்று கல்வி ______ சிறப்பு
அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்

3. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற _____காரணமாக அமைந்தது
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

4. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்________
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

5. சமையலறையில் செலவிடும் நேரம் ___________ செலவிடும் நேரமாகும்.
அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக

6. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ___________
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

7. கண்ணா வா! என்பது ______________த் தொடர்.
அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

8. விகாரப்புணர்ச்சி _______ வகைப்படும். அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

9. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______
அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி

10. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்______
அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

II கோடிட்ட இடங்களை நிரப்புக :- 5×1=5

11. ஆய்த எழுத்து பிறக்கும் இடம்______.
12. நீலகேசி கூறும் நோயின் வகைகள்_____.
13. கற்றவருக்கு அழகு தருவது ___________
14. ' மாங்கனி நகரம் ' என்று அழைக்கபடும் நகரம் __________________
15. கலப்பில் _________ உண்டென்பது இயற்கை நுட்பம்.

III பொருத்துக:- 4×1=4

16. இயற்கை ஓவியம் – புதுவருவாய்
17. பெயரெச்சத்தொடர் – கெடுதல் விகாரம்
18. மரவேர் – பத்துப்பாட்டு
19. யாணர் – எழுதியபாடல்

SIVANANDHA K M.A.,B.ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

IV பகுதி – II அடி பிறழாமல் எழுதுக :- 3+2=5

20. அ) " வாழ்கநிரந்தரம்!" எனத் தொடங்கும் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை அடிமாறாமல் எழுதுக. ( அல்லது )
ஆ) "ஆற்றுதல்" எனத் தொடங்கி ' மாறாஅமை" என முடியும் வரை உள்ள பாடறிந்து ஒழுகுதல் பாடலை அடிமாறாமல் எழுதுக.

21. " இதனை " எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

V பகுதி – III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10

22. உலகம் எவற்றால் ஆனது?
23. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
24. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
25. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
26. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
27. எம்.ஜி.ஆரின் சமூக நலத் திட்டங்களுள் நான்கினை எழுதுக.
28. பகத்சிங் கண்ட கனவு யாது?
29. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

VI எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4×2=8

30. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
31. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
32. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

33. தமிழ் எண்களை எழுதுக. அ) உலக ஈர நில நாள் பிப்ரவரி –2 ______
ஆ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் – 6 ______

34. கலைச்சொல் தருக. அ) Dyeing ஆ) Locust

35. சரியான மரபு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) சோறு ________ ( தின் / உண் ) ஆ) ஆ __________ ( நிரை / மந்தை )

VII எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :– 3×3=9

36. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

37. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

38. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

39. உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

40. அன்மொழித் தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக,

41. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

SIVANANDHA K.M.D.,B.ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

VIII பகுதி – IV எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

42. அ) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும். 5×5=25
விளக்கங்களைத் தொகுத்து எழுதுக. ( அல்லது )
ஆ) நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

43. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிப் பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

44. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.
*(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)*
1. இடி ________ மழை வந்தது. 2. மலர்விழி தேர்வின் ________ ஆயத்தமானாள்
3. அருவி மலையில் ________ வீழ்ந்தது.
4. தமிழைக் _________ சுவையான மொழியுண்டோ!
5. யாழ், தமிழர் _______ இசைக் கருவிகளுள் ஒன்று.

45. மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.
அ) ஆயிரங்காலத்து பயிர் – இயலாத செயல்
ஆ) கல்லில் நார் உரித்தல் – ஆராய்ந்து பாராமல்
இ) கம்பி நீட்டுதல் – இருப்பது போல் தோன்றும் ஆனால் இருக்காது
ஈ) கானல் நீர் – நீண்டகாலமாக இருப்பது
உ) கண்ணை மூடிக்கொண்டு – விரைந்து வெளியேறுதல்

46. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தக கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடை பெறுகின்றன?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

IX பகுதி –V அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3×8=24

47. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

48. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. *(அல்லது)*
ஆ) 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.

49. அ) முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை. குறிப்புகளைக் கொண்டு நூலகம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
*(அல்லது)* ஆ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் – இத்தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com